காஃபி

1. **வெள்ளைத் தண்டு துளைப்பான் : ஜைலோட்டிரிக்கஸ் குவாட்ரிப்பெஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- புழுக்கள் தண்டுகளை துளைத்து வேர்கள் வரை செல்லும்
- புழுக்களின் கழிவு பொருள் துளையினை மூடியிருக்கும்
- புழுக்கள் தாக்கப்பட்ட மரங்களில் பட்டைகள் மீதுள்ள தோல் பகுதி உயர்ந்து மேடாய் இருக்கும்
- இலைகள் மஞ்சளாக மாறி வாடிவிடும்
- புழுக்கள் தாக்கப்பட்ட இளஞ்செடிகள் (7 - 8 வருடம்) ஒரு வருடத்தில் இறந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டின் பழுப்புநிற இறக்கைகளின் குறுக்கே வெண்ணிறப் பட்டைக்கோடுகள் காணப்படும்
- ஆண் வண்டு பெண் வண்டை விட சிறியது
- ஆண்வண்டின் தலைப்பகுதியில் உயர்ந்த கருநிற திட்டுகள் தெளிவாக இருக்கும் ஆனால் பெண் வண்டில் தெரியாது

**கட்டுப்படுத்தும் முறை:**

- நிழல் தரும் மரங்களை நடுதல் வேண்டும்
- தாக்கப்பட்ட கிளைகளை வெட்டி செடிகளை பிடுங்கி எரித்து விடுதல் நல்லது

- தனியாக இருக்கும் மரத்தின் மேற்பட்டைகளை உரித்து முட்டைகளை அகற்ற வேண்டும்
- பட்டைகளில் இலேசான கோடுகள் கிழித்து விட வேண்டும்
- லின்டேன் @ 1300 மி.லியை 200 லிட்டர் தண்ணீர் கலந்து கரைசலை தண்டு மற்றும் கிளைப்பாகங்களில் தடவி விட வேண்டும்
- பெவிரீயா பெசியானா என்னும் பூசணம் தெளிக்க வேண்டும்

**2. காஃபி பழ துளைப்பான், ஹைபோதினீமாஸ் கேம்பியை:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- சிறுதுளைகள் பழங்களின் நுணியில் இருக்கும்
- தாக்குதல் அதிகமாக இருக்கும் பொழுது பழத்தில் இரண்டு, மூன்று ஓட்டைகள் இருக்கும்
- வண்டுகள் காஃபி கொட்டைகளை தின்று பழத்தின் உள்ளே ஒன்றும் இல்லாமல் செய்துவிடும்
- பழத்தினை அழுத்தினால் மாவுப்போன்ற தூள்கள் வெளிவரும்

**பூச்சியயின் விபரம்:**

- கருப்பு நிற வண்டுகள் உடலின் மேற்பரப்பில் சிறிய உரோமங்களை கொண்டிருக்கும்
- ஆண்வண்டு சிறியது

**கட்டுப்படுத்தும் முறை:**

- சரியான பயிர்சாகுபடி முறைகளை கையாள வேண்டும்
- தாக்கப்பட்ட காஃபி விதைகளை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லக் கூடாது
- பழம் சேகரிக்கும் உதவும் கோணிப்பைகளை பூச்சிக்கொல்லி கொண்டு புகையூட்ட வேண்டும்
- அறுவடை செய்த பழங்களை கொதிநீரில் 2 - 3 நிமிடம் நனைத்து எடுக்க வேண்டும்
- அறுவடை செய்த பழங்களை நன்கு உலர்த்தவேண்டும்

    1.அரபிக்கா - 10 சதம் ஈரப்பதம்

    2.ரொபஸ்டா - 11 சதம் ஈரப்பதம்

- கவர்ச்சிப்பொறிகள் வைத்து கவர்ந்து அழிக்கவும்
    1. அடுக்கு புனல் பொறி
    2. பதுங்கு குழி பொறி
- எண்டோசல்ஃபான் 340 மி.லி / 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்

**பெவீரியா பெசியானா - தெளிக்கும் வழிமுறைகள்:**

1. 500 மி.லி கடலை எண்ணெய்யுடன் 500 மி.லி ஒட்டும்பசை சேர்த்து நன்கு கலக்கவும்
2. பசைக்கலவையுடன் 20 லிட்டர் தண்ணீரை சேர்க்கவும் பிறகு 3 பை பெவீரியா மூலவித்துகளை சேர்த்து நன்கு கலக்கி வெள்ளைத் துணி

கொண்டு வடிகட்டி, பூசண வித்துக்களை பூச்சிதாக்கிய செடிகளின் மீது தெளிக்க வேண்டும்

**3. சிறு துளை வண்டு, சைலோசென்டரஸ் காம்ப்பேக்டஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- தண்டில் சிறுசிறு துளைகள் அதிகமாக இருக்கும்
- இலைகள் வாடிக்காயும்
- காற்றில் அசையும் போது தாக்கப்பட்ட கிளைகள் ஒடிந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டுகள் கரும்பழுப்பு நிறத்தில், உருளை வடிவில் இருக்கும் சிறு உரோமங்களை கொண்டிருக்கும்
- பெண்வண்டுகள் கருப்பாகவும், பெரியதாகவும் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- பூச்சிகொல்லிகள் சிறுதுளை வண்டுகளை கட்டுப்படுத்துவதில்லை
- பூச்சி தாக்கிய கிளைகளை களைந்து அழிக்கவேண்டும்
- சீரான நிழல் மற்றும் நல்ல வடிகால் அமைக்கவும்

**4. மாவுப்பூச்சிகள், பிளேனோகாக்கஸ் வகைகள்**

**பிளேனோகாக்கஸ் சிட்ரை**

**பிளேனோகாக்கஸ் லிலேசின்ஸ்**

- இளஞ்செடிகளை பூச்சிகள் விரைவாக தாக்கும்

- செடிகளின் அனைத்துப் பகுதிகளையும் தாக்கும்
- வெண்ணிறப்புள்ளிகள் இலைகளில் தோன்றும்
- சிறு காய்கள் தோன்றும்
- பூச்சியிலிருந்து வெளிவரும் தேன் போன்ற கழிவுப் பொருள் கரும்புகை பூசணம் ஏற்பட வழிவகை செய்கிறது

**பூச்சியின் விபரம்:**

- ஆண் - சிறியது, இறகுடையது
- பெண் - இறகற்றது, நீள்வட்டவடிவமுடையது

**கட்டுப்படுத்தும் முறை:**

- தேவையான அளவு நிழல் தரும் மரங்களை நடவேண்டும்
- சிவப்பு எறும்புகளின் கூண்டுகளை அழிக்கவும்
- எறும்புகளை கட்டுப்படுத்த குவினால்ஃபஸ் தூள் 1.5 சதம் அல்லது மீதைல் பாரத்தியான் 2 சதம் அல்லது மாலத்தியான் 5 சதம் தூள்களை நிழல் தரும் காஃபி மரத்தின் அடியில் தூவ வேண்டும்
- தாக்கப்பட்ட இலைப்பகுதியில் குவினால்ஃபஸ் 300 மி.லி அல்லது ஃபென்தியான் 150 மி.லி தெளிக்கவேண்டும்
- மேலே பயன்படுத்தப்பட்ட ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி கரைசலை வேர்கள் நனையும் படி மண்ணில் ஊற்ற வேண்டும்
- டைமீதோயேட் 3 மி.லி / லிட்டர் கரைசலை இளஞ்செடிகளின் வேருக்கு அடியில் ஊற்றவேண்டும்

**5. பச்சை செதிள் பூச்சி, காக்கஸ் விரிடிஸ்:**

**சேத்ததின் அறிகுறிகள்:**

- இலை, தண்டு, பூச்சரம் மற்றும் பழத்திலிருந்து சாற்றை பூச்சிகள் உறிஞ்சி சேதப்படுத்தும்
- இலை மேல் நோக்கி சுருங்கி காணப்படும்
- தேன் போன்ற கழிவுப்பொருள் பூச்சியிலிருந்து வெளிவரும் அப்பொருள் கரும்புகை பூசணம் ஏற்பட வழிவகை செய்கிறது

**பூச்சியின் விபரம்:**

- இளம் குஞ்சு: வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும்
- பூச்சி : தடையான நீள்வட்டவடிவில் பச்சை நிறத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் அதன் மேற்பரப்பில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- எறும்புகளை கட்டுப்படுத்த குவினால்ஃபஸ் தூள் 1.5 சதம் அல்லது மீதைல் பாரத்தியான் 2 சதம் அல்லது மாலத்தியான் 5 சதம் தூள்களை நிழல் தரும் காஃபி மரத்தின் அடியில் தூவ வேண்டும்
- செதில் பூச்சிகள் இருக்கும் கிளைகளை வெட்டி எரித்து விடவேண்டும்
- குவினால்ஃபஸ் 120 மி.லி அல்லது ஃபென்தியான் 120மி.லி அல்லது மீதைல் பாரத்தியான் 120 மி.லி உடன் 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும்

**6. பழுப்பு செதிள் பூச்சி : செய்சீசியா காஃபியே:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலையின் அடிபகுதியில் இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்
- தேன் போன்ற கழிவுபொருள் கரும்புகை பூசணம் ஏற்படுத்துகிறது

**பூச்சியின் விபரம்:**

- இளம் குஞ்சு: மஞ்சள், பசுமை கலந்த பழுப்பு அல்லது ஊதா நிறத்தில் இருக்கும். தட்டையான, நீள்வட்ட வடிவில் இருக்கும். உடலில் ‘H’ வடிவ மஞ்சள் நிற அடையாளம் இருக்கும்
- பூச்சி: பெண் செதிள் பூச்சி அரைகோள வடிவில் இருக்கும், கடினமான பழுப்பு நிற உறை உடலின் மேலிருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- எறும்புகளை கட்டுப்படுத்த குவினால்ஃபஸ் தூள் 1.5 சதம் அல்லது மீதைல் பாரத்தியான் 2 சதம் அல்லது மாலத்தியான் 5 சதம் தூள்களை நிழல் தரும் காஃபி மரத்தின் அடியில் தூவ வேண்டும்
- செதில் பூச்சிகள் இருக்கும் கிளைகளை வெட்டி எரித்து விடவேண்டும்
- குவினால்ஃபஸ் 120 மி.லி அல்லது ஃபென்தியான் 120மி.லி அல்லது மீதைல் பாரத்தியான் 120 மி.லி உடன் 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும்

**7. வேர்ப்புழு : ஹோலேட்ரைக்கிய வகை:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகள் மஞ்சளாகும்

- வளர்ச்சிக் குன்றிவிடும்
- தாக்கப்பட்ட செடிகள் வாடி காய்ந்துவிடும்
- தாக்கப்பட்ட செடிகளை எளிதாக பிடுங்கி விடலாம்

**பூச்சியின் விபரம்:**

- வண்டினப்புழு: 'C' வடிவ, அழுக்கடைந்த வெண்மையான நிறத்தில் இருக்கும், தலை கரும்பழுப்பு நிறத்தில் இருக்கும்
- வண்டு: செம்பழுப்பு நிறத்தில் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட செடியின் வேருக்கடியில் லிண்டேன் 750 மி.லி 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்ற வேண்டும்
- வேர்புழுக்களின் தாக்கம் அதிகமாக உள்ள இடங்களில் நடவின் போது ஃபோரேட் குருனை 10 கிராம் அல்லது கார்ஃபோபீயூரான் குருனை 10 கிராம் மண்குழியில் இடவேண்டும்
- ஒரு செடிக்கு 20 கிராம் ஃபோரேட் குறுனையை மண்ணில் செடியின் அடியில் இடவேண்டும்
- புழுக்களை சேகரித்து அழிக்கவும்
- விளக்குப்பொறி அமைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம் (மார்ச் - ஜீன் மாதங்களில்)

8. கம்பளிப் பூச்சி : யூப்டிரோட் வகைகள்:

**சேதத்தின் அறிகுறிகள்:**

- அரேபிகா காஃபியல் சேதம் அதிகமாக இருக்கும் இலைகள் முழுவதும் கடித்து சேதப்படுத்தப்பட்டிருக்கும்

**பூச்சியின் விபரம்:**

- புழு : வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும், கருப்புநிற உரோமங்கள் இருக்கும்
- பூச்சி : மஞ்சள் பழுப்புநிற அந்துப்பூச்சி, இறக்கையில் இரண்டு பட்டைகோடுகளும், குறுக்குநெடுக்கு கோடுகளும் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை சேகரித்து அழிக்கலாம்
- ஜனவரி மற்றும் மே மாதங்களில் கூட்டுப்புழுக்களை சேகரித்து எரிக்கவும்
- விளக்குப்பொறி வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்
- குவினால்ஃபஸ் 320 மி.லி, மீதைல் பாரத்தியான் 160 மி.லி அல்லது ஃபென்னைட்ரோதியான் 240 மி.லி உடண் 100 மி.லி பசை கலந்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்

9. காஃபிபழ வண்டு : அரேயிசெரஸ் ஃபாஸிகுளேட்டஸ்:

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இப்பூச்சியின் தாக்கம் சேமிப்புக்கிடங்குகில் கடும்சேதத்தை உருவாக்கும்
- தாக்கப்பட்ட காஃபி பழங்களை சிறுசிறு துளைகள் காணப்படும்
- தாக்கப்பட்ட பழங்கள் சுருங்கி கருகிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டு: வெளிர் சாம்பல் நிற வண்டில் கரும்புள்ளிகள் இருக்கும். உடலில் மெல்லிய உரோமங்கள் இருக்கும். இறக்கைகள் வயிறு பகுதி முழுவதையும் மூடுவதில்லை

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- சேமிப்புகிடங்கில் சீரான வெப்பநிலை, ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்
- வாயுநச்சுப் பொருள்களான எத்திலின் டைஃப்ரோமைடு மற்றும் மிதைல் ஃபரோமைடு இரண்டையும் 1:1 விகிதத்தில் கலந்து காஃபி சேமிப்பு கிடங்கில் புகைபரப்ப வேண்டும்
- கோனிப்பைகளை மாலத்தியான் 10 மி.லி + 2 கிராம் பைரித்திரம் இரண்டையும் 1 லிட்டர் தண்ணீரில் கலந்த கரைசலில் நனைத்து உபயோகப்படுத்தவும்

10. **நத்தை : ஆரியாபேண்டா சொலேட்டா:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- அரேபிகா காஃபியில் இலைகள் கடித்து சேதப்படுத்தப்பட்டிருக்கும்

- பழங்களின் தோல்களை சேதப்படுத்தும்

**பூச்சியின் விபரம்:**

- நத்தை வெண்ணிற சுருள் வடிவ ஒட்டினுள் இருக்கும்

**கட்டுப்படத்தும் முறை:**

- தோட்டத்தினை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்
- நத்தையை சேகரித்து கொதிநீரில் அல்லது உப்பு நீரில் நனைத்து கொள்ளவேண்டும்
- ஹெக்டேருக்கு மெட்டால்டிஹைடு 25 - 35 கிராம் நச்சு உணவு வைக்கவேண்டும்
- எலுமிச்சைசாறு, கரித்தூள் கலந்து தூவினால் நத்தை வராது

11. **சிவப்பு தண்டுத் துளைப்பான்** : **சுசீரா காஃபியே:**

**சேதத்தின் அறிகுறிகள்**:

- புழுக்கள், தண்டுகளையும், கிளைகளையும் துளைத்து சாப்பிடும்
- செடி வாடி விடும்
- புழுக்களின் கழிவுப்பொருள் துளைகளுக்கு வெளியே தொங்கியிருக்கும்
- முற்றிய நிலையில் கிளைகள் காய்ந்துவிடும்

**புச்சியின் விபரம்:**

- புழு: சிவப்பு நிறமாக கருந்தலையுடன் காணப்படும்

- பூச்சி: அந்துப்பூச்சி ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். இறக்கையில் நீலநிறப்புள்ளிகளுடன் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- தாக்கப்பட்ட செடிகள் மற்றும் கிளைகளை வெட்டி எரித்துவிட வேண்டும்
- பெவீரியா பெசியானா எனும் பூசண வித்துகளை வயலில் தெளித்து பூச்சியை அழிக்கலாம்